குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.92/2020

அ.சா.5

2025–ம் ஆண்டு நவம்பர் 18–ம் தேதி செவ்வாய்க்கிழமை அரசு தரப்பு சாட்சி 05–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.சிவக்குமார் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திருமுருகன் | தொழில் | |
| தந்தை பெயர் | துரையன் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 01.27 மணி,

Accused Jayakumar present. Advocate Mr.Dhanakoteeswaran present for accused. APP Mr.M.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் பனங்காட்டில் குடியிருந்து நெசவு தொழில் செய்து வருகிறேன். கடந்த 2019 ஆம் ஆண்டு ஒருநாள் பகல் 01.00 மணியளவில் நான் தறி ஓட்டிக்கொண்டிருந்தபோது திடீரென சிவா கார்டன் அருகே முத்துநாயக்கன்பட்டி செல்லும் சாலையில் சத்தம் கேட்டது. அங்கு சென்று பார்த்தபோது ஓமலூர் பக்கமிருந்து முத்துநாயக்கன்பட்டி சென்ற ஸ்பிளண்டர் பிளஸ் இருசக்கர வாகனம் ஓமலூர் நோக்கி வந்த டாடா ஏசிஇ வாகனமும் மோதி விபத்து ஏற்பட்டிருந்து.

2. இருசக்கர வாகனத்தில் வந்த நபர் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். எந்த வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது என்று நான் பார்க்கவில்லை. சம்பவம் நடந்த மறுநாள் போலிசார் அங்கு வந்து விபத்து குறித்து விசாரணை செய்தார்கள். நானும் அரவிந்த் என்பவரும் அங்கு இருந்தோம். அப்போது போலிசார் வரைபடம் வரைந்தார்கள். அதன்பின்பு சாட்சி கையெழுத்து வாங்கினார்கள். நானும், அரவிந்த் என்பவரும் சாட்சி கையெழுத்து போட்டோம். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது சாட்சி கையெழுத்து என்னுடையது. ( **அந்த கையெழுத்து அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலிசார் விசாரித்தார்கள்.

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2025.11.18 17:14:04 +0530

**(அரசு தரப்பு சாட்சி வழக்கு சம்பவத்தை நேரில் பார்த்தது பொறுத்தமட்டில் பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்க கேட்டதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)**

3. கடந்த 08.09.2019 ஆம் தேதி 13.30 மணியளவில் ஓமலூர் – முத்துநாயக்கன்பட்டி செல்லும் சாலையில் வெங்கடேஷ் என்பவர் டி.என்.30 பி.எஸ்.1643 என்ற பதிவெண் கொண்ட ீஹரோ ஸ்பிளண்டர் இருசக்கர வாகனத்தில் முத்துநாயக்கன்பட்டி நோக்கி சென்றபோது அதே சாலையில் அவருக்கு எதிர்திசையில் ஓமலூர் நோக்கி ஆஜர் எதிரி டி.என்.52 இசட். 7932 என்ற பதிவெண் கொண்ட டாடா ஏசிஇ வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து, வெங்கடேஷ் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தினார் என்றாலும் அதை நான் நேரில் பார்த்தேன் என்றால் சரியல்ல. நான் விபத்தினை பார்க்கவில்லை.

4. விபத்தினை நேரில் பார்த்துவிட்டு, விசாரணையின்போது மேற்கண்ட சங்கதிகளை கூறிவிட்டு தற்போது சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

5. நான் கையெழுத்திட்ட பார்வை மகஜரில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரி. என்னிடம் கையெழுத்து பெற்ற பின்பு போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரி.

**மறுவிசாரணை : இல்லை**

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 01.34 மணி.**

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2025.11.18 17:14:08 +0530